Registered as a Newspaper · பக்கங்கள் 04 · விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம் 04 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · ஆவணி 05 · (21-08-1993) · சனிக்கிழமை · ஓசை 184

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் சுண்ணாகத்தில் இன்று திறப்பு

தமிழீழத்தின் முதலாவது மாவட்ட நீதிமன்றம் இன்று காலை 10 00 மணியளவில் சுண்ணாகம் உடுவில் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந் நீதிமன்றத்தில் நீதித் துறையில் பயிற்சிபெற்ற போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் பணியாற்ற உள்ளனர். இந் நீதியாளர்களும், சட்டவாளர்களும் நேற்று முன் தினம் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை தெரிந்ததே. முன்பு பஞ்சாயத்து [4 ஆம் பக்கம் பார்க்க]

கந்தளாய் பகுதியில்

## பொலிஸ் நிலையம் மீது புலிகள் ஷெல் வீச்சு

(திருமலை)

திருக்கோணமலை கந்தளாய் பகுதியில் உள்ள வில்பதிவேவா சிங்கள குடியேற்றக் கிராமத்தில் உள்ள சிறிலங்கா பொலிஸ் நிலையம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடந்த 13ஆம் திகதி மாலை இத் தாக்குதல் இடம்பெற்றது. இவ் எறிகணைத் தாக்குதல்களை அடுத்து பொலிசாருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே துப்பாக்கிப்பிரயோகத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினரும், விமானப்படையினரும் அப்பகுதிக்கு வந்து தாக்குதல்களை நடாத்தியதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## எறிகணைத் தாக்குதலினால் கடற்றொழில் பாதிப்பு

### நிவாரணம் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

'சிறிலங்கா இராணுவத்தின் சமீபகால எறிகணைத் தாக்குதலினாலும், துப்பாக்கிப்பிரயோகத்தினாலும் பரவைக் கடலிலும் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடற்கரையோரங்களில் வாழும் மக்கள் இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சி பாடசாலைகளிலும், ஆலயங்களிலும், பாதுகாப்பு வலயத்திலுள்ளும் இரவு வேளைகளில் தங்குகின்றனர். பாதிப்படைந்த கடற்றொழிலாளருக்கு மீண்டும் உலர் உணவு நிவாரணத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.'

இவ்வாறு யாழ். நாவாந்துறை சென். மேரிஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும், நாவாந்துறை கிராமிய கடற்றொழிலாளர் சமூக அபிவிருத்தி அமைப்பும் கூட்டாக இணைந்து கோரியுள்ளன.

இதன் பிரதி யாழ். அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர். யாழ். கடற்றொழில் விரிவாக்க அதிகாரி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (தி)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் தமிழ்க் குழுக்கள் நிராகரிப்பு

### உலகை ஏமாற்றும் அரசின் நடவடிக்கை என கண்டனம்

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் பல பகுதிகளில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்திருப்பதை அனைத்துலக சமூகத்தை ஏமாற்ற அரசு கையாளும் ஒரு யுக்தியே என கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் கண்டனம் தெரிவித்துள்ளதோடு அரசாங்கத்தின் திட்டத்தையும் நிராகரித்துள்ளன.

தேர்தல் ஆணையாளர் வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் என்று திடீரென அறிவித்திருப்பது ஒரு விளம்பரம் என்றும், அப்பகுதிகளில் சாதகமான நிலை இல்லை என்றும், அதனால், தேர்தல் நடத்துவதென்ற அறிவிப்பை ஏற்க முடியாது என்றும் தமிழ்க் குழுக்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலைமை சகஜமாக இருக்கின்றதென்பதை சர்வதேச சமூகத்திற்குக் காட்டவே அரசு தேர்தல்பற்றி அறிவிப்பதாகவும், ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ. நா. சபையின் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பாரபட்சங்களை தடுக்கும் துணைக் குழு கூட்டத்தில் சிறிலங்கா தொடர்பாக வாக்கெடுப்பு நடைபெறவுள்ள வேளையில் தேர்தல் பற்றி அறிவித்தமை இலங்கை அரசின் பிரசார யுக்தி எனவும் குற்றம் சாட்டியுள்ளன.

## இடைநிறுத்தம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சபாநாயகரின் உத்தரவை மீறி அரசைக் கண்டித்துப் பேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேரை ஒரு கிழமைக்கு சபாநாயகர் எம் எச். முகமெட் இடைநிறுத்தம் செய்துள்ளார்.

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான வின்சென்ற் பத்திரன. பி.ஜி குணரட்ண, டி. எம். ஜெயரட்ண மற்றும் மைத்திரிபால சிறிசேனா ஆகிய நான்கு பேருமே இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்களாவர்.

## இராணுவ காவலரண் மீது புலிகள் எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மற்றும் மாதகல் பகுதி சிறிலங்கா இராணுவ மினி முகாம் மற்றும் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 12-20 மணியளவில் மாதகல் பகுதி சிறிலங்கா இராணுவ

... கொண்டனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரும் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை நேற்றுக் காலை 7 மணியளவில் காரைநகர் பகுதி பாலத்தில் அமைந்திருந்த காவலரண் மற்றும் வலந்தலை பகுதி மினி முகாம் ஆகியவற்றின்மீதும்விடுதலைப்

புலிகளின் இத் தாக்குதலை தொடர்ந்து காரைநகர் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பரவலாக பீரங்கித்தாக்குதல்களை நடாத்தியதுடன் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் நடாத்திய எறிகணைத் தாக்குதல்க

## படகு உரிமையாளர் சமூகம் தரவும்

புலோப்பளை பயணிகள்

## தேர்தல் நடத்துவதற்கான உகந்த சூழ்நிலையில்லை

### - குமார் பொன்னம்பலம்

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்திலும், வட மாகாணத்தின் ஒரு பகுதியிலும், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் விடயத்தில் அரசாங்கம் நிதானத்துடன் நடந்து கொள்ளவில்லை என தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம்

ஒரு தேர்தல் அல்ல என்பது தான் எனது கருத்தாகும். ஏனென்றால் ஒரு சில நாட்களுக்கு முன்னர்தான் அரசாங்கத்துக்கு படையினர் சொல்லியிருந்தார்கள். சர்வ

நாம் கணிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு நிலை சரியில்லை என்று தெரிந்து கொண்டும் தேர்தலை அங்கு நடத்துவது என்றால் இது இரத்தக் கள

ளிலும், ஆலயங்களிலும், பாதுகாப்பு வலயத்தினுள்ளும் இரவு வேளைகளில் தங்குகின்றனர். பாதிப்படைந்த கடற்றொழிலாளருக்கு மீண்

சாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர். யாழ். கடற்றொழில் விரிவாக்க அதிகாரி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (தி)

தேர்தல் ஆணையாளர் வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் என்று திடீரென அறிவித்திருப்பது ஒரு விளம்பரம் என்றும், அப் பகுதிகளில் சாதகமான நிலை இல்லை என்றும், அதனால், தேர்தல் நடத்துவதென்ற அறிவிப்பை ஏற்க முடியாது என்றும் தமிழ்க் குழுக்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலைமை சகஜமாக இருக்கின்றதென்பதை சர்வதேச சமூகத்திற்குக் காட்டவே அரசு தேர்தல்பற்றி அறிவிப்பதாகவும், ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. சபையின் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பாரபட்சங்களை தடுக்கும் துணைக்குழு கூட்டத்தில் சிறிலங்கா தொடர்பாக வாக்கெடுப்பு நடைபெறவுள்ள வேளையில் தேர்தல் பற்றி அறிவித்தமை இலங்கை அரசின் பிரசார யுக்தி எனவும் குற்றம் சாட்டியுள்ளன.

மைத்தரிபால சிறிசேனா ஆகிய நான்கு பேருமே இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்களாவர்.

# ராணுவ காவலரண் மீது புலிகள் எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மற்றும் மாதகல் பகுதி சிறிலங்கா இராணுவ மினி முகாம் மற்றும் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 12-20 மணியளவில் மாதகல் பகுதி சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரும் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை நேற்றுக் காலை 7 மணியளவில் காரைநகர் பகுதி பாலத்தில் அமைந்திருந்த காவலரண் மற்றும் வலந்தலை பகுதி மினி முகாம் ஆகியவற்றின் மீதும் விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

புலிகளின் இத் தாக்குதலை தொடர்ந்து காரைநகர் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பரவலாக பீரங்கித்தாக்குதல்களை நடாத்தியதுடன் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் நடாத்திய எறிகணைத் தாக்குதல்களால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

# வெளிநாட்டவர் குடியேற்றம் தடுக்கும் சட்டம் நிராகரிப்பு

(பாரிஸ்)

வெளிநாட்டவர் குடியேற்றத்தைக்கட்டுப்படுத்தும் பிரச்சினைக்குரிய சட்டத்தின் முக்கிய பகுதிகளை பிரெஞ் அரசியலமைப்பு சபை நிராகரித்துள்ளதுடன் அவற்றை திருத்தியமைக்குமாறும் பிரெஞ் அரசை கோரியுள்ளது.

52 சட்டவிதிகளில் எட்டு சட்டவிதிகளை நிராகரித்த சபை பிரெஞ் பகுதியில் வசிக்கும் வெளிநாட்டவரின் அடிப்படை உரிமைகளை அவை மீறுவதாக உள்ளன என்றும் கூறியுள்ளது. கன்சர்வேட்டிவ்களாலும் வலதுசாரி குழுக்களாலும் வரவேற்கப்பட்ட உத்தேச குடியேற்ற சட்டத்தை மனித உரிமை குழுக்களும் இன விரோத எதிர்ப்புக் குழுக்களும் கண்டித்திருந்தன இச் சட்டத்தை எதிர்த்து சோஷலிஸ்ட் கம்யூனிஸ பாராளுமன்ற அங்கத்தினர் அரசியலமைப்பு சபையிடம் முறையிட்டிருந்தனர்.

பிரான்ஸில் 40 லட்சம் வெளிநாட்டவர்கள் சட்டபூர்வமாகவசிக்கின்றனர். ஆனால் 3 லட்சம் முதல் 10 லட்சம் வரையிலானோர் சட்டவிரோதமாக வசித்து வருகின்றனர்.

# மக்கள் குடியிருப்புகள் மீது இராணுவம் ஷெல் வீச்சு

(நமது நிருபர்)

மண்டைதீவு பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கொட்டடி பகுதிமீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலால் பெண்மணிஒருவர் காயமடைந்தார். மூன்று வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுமாலை 6.30 மணி முதல் 7.00 மணி வரையில் மூன்று எறிகணைகள் ஏவப்பட்டன. இவை கொட்டடிப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது வீழ்ந்து வெடித்ததில் மெற்றில்டா வரப்பிரகாசம் [54] காயமடைந்தார். நமசிவாயம் வித்தியாலய அருகில் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

# மக்கள் இடம்பெயர்வு

நேற்று மாலை மண்டைதீவு இராணுவம் கொட்டடி பகுதி நோக்கி மேற்கொண்ட தாக்குதல்களால் பல நூற்றுக் கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் குழந்தைகள் எனப் பலதரப்பட்டோரும் கையில் கிடைத்த சிறுசிறு கைப்பைகளைக் கைகளில் ஏந்தியவாறு வீதி ஓரங்களில் பதுங்கிப் பதுங்கி யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயத்திற்குள் வந்து அங்கிருந்த வர்த்தக நிலையங்களின்முன்பாக தமது இரவைக் சழித்தனர்.

# புலிகள் இந்நூற்றாண்டின் இணையற்ற போராளிகள்

## அவுஸ்திரேலிய பத்திரிகை புகழாரம்

தமிழீழத்திற்காகப்போராடி வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் விடுதலைப் போராளிகள் மட்டுமல்ல. அவர்கள் தமது கொள்கையில் அதீத நம்பிக்கை கொண்டவர்களென அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் 'சிட்னி மோணிங் ஹெறல்ட்'பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேற்படி பத்திரிகையின் செய்தியாளர் வின்சிமேச் டொச் எழுதிய குறிப்பொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தங்களது கொள்கையை தமது உயிரினும் மேலாக நேசிக்கின்றனர். அவர்கள் தமது உயிர்களைத் துச்சமென மதிப்பவர்[illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

# படகு உரிமையாளர் சமூகம் தரவும்

புலோப்பளை பயணிகள் படகுச்சேவையில் ஈடுபட்டுள்ள சகல படகு உரிமையாளர்களையும், ஓட்டுநர்களையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு புலோப்பளை பயணிகள் படகுத்துறைச் செயலகத்திற்கு தவறாது வருகை தரும்படியும், வரும்போது படகுச்சேவையில் பாவிக்கப்படும் வெளி இணைப்பு இயந்திரங்கள், மற்றும் சகல உபகரணங்களையும் கொண்டு வரும்படியும் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# இன்று பயணம் செய்யலாம்

கடந்த 17 ஆம் திகதி நரோமா கப்பலில் கொழும்பு செல்ல பெயர்கள் பதிந்தவர்கள் இன்று கப்பலில் கொழும்பு புறப்படுகின்றனர்.

பதிவு செய்த பயணிகள் இன்றுபகல் 1-00மணிக்குபருத்தித்துறை இறங்குதுறைப் பகுதிக்கு பயணத்திற்கு தயாராக வரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது

# வலிகாமம் சட்டத்தரணிகள் நேற்று சத்தியப் பிரமாணம்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதிநிர்வாகத்துறையில் யாழ். மாவட்ட வலிகாமப் பிரிவில் வாழும் சட்டத்தரணிகள் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஆகியோர் முன்னிலையில் சட்டத்தரணிகளின் சத்தியப் பிரமாண வைபவம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நீதிநிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு. பரா உரை நிகழ்த்தும் போது பல நெருக்கடிகள் மத்தியில் தமிழீழத்தை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் துணிச்சலுடன் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ள சட்டத்தரணிகளைப் பாராட்டி நீதித்துறை சரிவர இயங்க அவர்களது ஒத்துழைப்பை மேலும் வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்,

அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் உரையாற்றுகையில் பொருளாதாரத் தடைகளாலும் போராட்டச் சூழலாலும் குற்றம் புரிவோர் தொகை அதிகரித்துள்ள நிலையில் குற்றங்களுக்கான காரணங்களை நன்கு அறிந்து மக்களுக்கு சரியான முறையில் நீதிவழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் அவர்களும் உரை நிகழ்த்தினார்.

# தேர்தல் நடத்துவதற்கான உகந்த சூழ்நிலையில்லை

## - குமார் பொன்னம்பலம்

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்திலும், வட மாகாணத்தின் ஒரு பகுதியிலும், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் விடயத்தில் அரசாங்கம் நிதானத்துடன் நடந்து கொள்ளவில்லை என தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தனது பேட்டியில் உலக நாடுகளின் கவனம் இலங்கையில் திருப்பப்பட்டிருக்கும் இந்த வேளையில், எங்களுக்கு ஒரு இனப் பிரச்சினை இல்லை. பயங்கரவாதப் பிரச்சினைதான் இருக்கிறது எனக்கூறிய அரசாங்கம் ஏதேனும் ஒன்றைச்செய்யவேண்டும் என்ற அபிப்பிராயத்துடன் தேர்தலை நடத்த முன்வந்துள்ளது. ஆனாலும் இந்தத் தேர்தல் உண்மையாக தமிழ் மக்களுக்கு உகந்த ஒரு தேர்தல் அல்ல என்பது தான் எனது கருத்தாகும். ஏனென்றால் ஒரு சில நாட்களுக்கு முன்னர்தான் அரசாங்கத்துக்கு படையினர் சொல்லியிருந்தார்கள். சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கு மாகாணத்தில் வைக்க முடியாது என்று அதேபோல மாகாண சபைத் தேர்தலும் கூட அங்கு வைக்க முடியாமல் போய்விட்டது.

ஒரு சில நாட்களுக்கு முன் ஜனகபுர என்ற முகாம் அழிக்கப்பட்டிருந்தது. ஆகையால் பாதுகாப்பு நிலைமை அங்கு சீராக உள்ளது என்று கூற முடியாது. இப்படியான ஒரு நிலையில் ஒரு தேர்தல் வைப்பதென்றால் அது உண்மையாகத் தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடிய தேர்தலாக நாம் கணிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு நிலை சரியில்லை என்று தெரிந்து கொண்டும் தேர்தலை அங்கு நடத்துவது என்றால் அது இரத்தக் களரியைத் தான் உருவாக்கும் என்று கருதுகிறேன்.

வடக்கிலும் கிழக்கிலும், தேர்தல்கள் நடப்பதற்கு சரியான காலம் எப்போது வரும் என நினைக்கிறீர்கள்? எனக் கேட்கப்பட்டதற்கு,

அதைப்பற்றித் தெரியாது ஏனென்றால் பாதுகாப்புநிலைமைகள் சரியில்லை. எப்ப வரும் என்று எனக்கே தெரியாது. வராது என்பது தான் என்னுடைய தனிப்பட்ட கருத்து. ஆனாலும்வந்ததற்கு பின்புதான்தேர்தல் வைக்கமுடியும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# இனப்பிரச்சினையில் தலையீடு? ஐ. நா. உபகுழுவில் வாக்கெடுப்பு

(ஜெனீவா)

இலங்கை இனப்பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை தலையீடுசெய்வதா? என்பது குறித்துபரிந்துரைசெய்வதற்கு ஜெனீவாவில் நேற்று கூடிய ஐ.நாவின் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பாரபட்சம் தடுக்கும் துணைக்குழு வாக்கெடுப்பு நடாத்த இருந்தது.

மேற்படி குழுவின் மாநாட்டில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் உடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டும் என ஐ. நா. செயலர் சிறிலங்கா அரசைவற்புறுத்தவேண்டும்எனக் கோரும் பிரேரணை ஒன்றை அமெரிக்கா. பிரான்ஸ், நோர்வே, பெல்ஜியம் ஆகிய நாடுகள் கூட்டாக கொண்டுவந்திருந்தன.

மேலும் உள்நாட்டுப் போரை கையாண்ட விதம் குறித்தும் சிறுபான்மை இன மக்களை நடத்தும் விதம் குறித்தும் சிறிலங்கா அரசுக்கு எதிராக இந்நான்கு நாடுகளும் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் இக்கூட்டத்தில் முன்வைத்திருப்பதுடன் சிறி

(4ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்ற தெரிவுக்குழு அடுத்த வாரம் கூடும்

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு இம் மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் தெரிவுக்குழுவின்இடைக்கால அறிக்கை வரைவு சம்பந்தமாக அரசியல் கட்சிகளும், எம். பி களும் வெளியிட்ட கருத்துக்கள் இக் கூட்டங்களில் ஆராயப்படவுள்ளன.

இவ் இருநாள் கூட்டம் தொடர்பாக தெரிவுக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சில அரசியல்கட்சிகளும் எதிர்க்கட்சி எம். பி களும் இடைக்கால அறிக்கை வரைவுதொடர்பாக அனுப்பிய கடிதங்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பிரத்தியேக வகுப்பு

G C E A/L 94—95 தமிழ் இந்து நாகரிகம், சனி, ஞாயிறு 10—12 பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன இந்து நாகரிகம் 94 (வினாவிடை வகுப்பு) ஆரம்பம் 21-08-1993 காலை 10 மணி ஆசிரியர் திரு. தாஸ் கடேன் கலை நிலையம் (எழில்கம் அருகாமை) யாழ்ப்பாணம். 5734)

### தவறிவிட்டது

உரும்பராய் வடக்கை சேர்ந்த ஏ-ஆர் பாலசுப்பிரமணியம் சந்திர லட்சுமி அவர்களின் கைக்கடிகாரம் பூங்காவனத்தன்று நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்திலோ ஈழநாதம் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். சன்மானம் கொடுக்கப்படும்: (5741)

### விற்பனைக்கு உண்டு

கமராக்கள் OM1 OM 2. Fx 7 பில்லர் லென்ஸ். சூம் லென்ஸ்கள் விற்பனைக்கு உண்டு. சேனசன்ஸ் இல. 10 செட்டித்தெரு, நல்லூர் யாழ்ப்பாணம். (5717)

### எலற்றிக் வெல்டர் தேவை

பிரபலியமான மோட்டார் திருத்தும் தொழிலகத்திற்கு அனுபவம் வாய்ந்த எலற்றிக் வெல்டர் தேவை. தகுதியுள்ளோர் நேரில் தொடர்பு கொள்ளவும். திருமணமாகாதவர் விரும்பத்தக்கது. மிகுதி நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்பு. துரைமோட்டார் உயிரூட்டகம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (சி-7227)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் அமைந்துள்ள 15 பரப்பு தோட்டக்காணி தனிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி தி. கோமளா, பனிக்கர் வளவு லேன், பலாலி வீதி, திருநெலவேலி. (5744)

### தபால் பொதிகள் எடுத்துவர படும்

(யாழ்ப்பாணம்)


அடுத்தவாரம் பருத்தித்துறையை வந்தடையவுள்ள வாதுவ கப்பலில் யாழ் பிரதான தபாலகத்திற்கான ஒரு தொகுதி தபால் பொதிகள் எடுத்து வரப்படவுள்ளதாக தெரிய வருகின்றது இக்கப்பல் யாழ் மாவட்டத்திற்கான சுமார் 4000 மெற்றிக்தொன் மா ஏற்றி வரவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது- (பா)

### மாட்டு வண்டி சவாரிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வர்த்தகர் சங்க ஆதரவில் நடைபெறும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை 22ஆம்திகதி பிற்பகல் 2. 30 மணிக்கு கந்தரோடை சவாரி திடலில் நடைபெறவுள்ளது.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை நேசன்

(கார்த்திகேசு சிவநாதன்)

| மைந்தனாக | மாவீரனாக |
|---|---|
| 10-08-1975 | 21-08-1992 |

தமிழ்த்தாயின் பாலுண்டு வளர்ந்தாய்
தாயகத்தைக் காதல் கொண்டாய்
தலைவன் காட்டிய வழிநடந்தாய்
தாய்மண்ணில் பலகளம் வென்றாய்
தளராத இலட்சியத்தால் மாவீரனானாய்
தம்பி உம்வழி தொடர்வதே எம்பணி

இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள். இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் சகல போராளிகளையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மாசேரி,
வரணி
(5715)

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்.

## நினைவு கூருகின்றோம்... 1993-08-21

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை- அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1989ஆம் ஆண்டு அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நளின்** (பிரதாப்குமார் அஜித்குமார் - தாமரைக்குளம், பொத்துவில் - அம்பாறை)

**அலன்** (சின்னத்தம்பி செல்லத்துரை - நற்பிட்டிமுனை - 07, கல்முனை - அம்பாறை)

பருத்தித்துறை - தம்பசிட்டி, நாவலடிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் டயஸ், கந்தசாமி** (மயில்வாகனம் தவராசா - 66 ஈச்சமோட்டை- யாழ்ப்பாணம்

**லெப். யூகி, சுதா** (இராசதுரை சுதர்சன் - ''சுந்தர நிவாஸ்'' வி.எம் வீதி-பருத்தித்துறை)

வடமராட்சி, திக்கம், அல்வாய் மேற்கு, பூமாஞ்சோலை, வியாபாரிமூலை, நாவலடிச்சந்தி ஆகிய பகுதி

# பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்

# PATRICIAN INSTITUTES

### தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. **Diploma In Computer Studies**
   - BASIC
   - WORD PROCESSING
   - LOTUS 1-2-3
   - d BASE III PLUS
   
   DURATION: 9 MONTHS
   
   WEEK DAYS AND WEEK - END CLASSES (THEORY AND PRACTICALS)
   COMMENCING: 04-09-1993

2. **Computer Processing Courses**
   (1) COMPUTERS PROGRAMMING IN BASIC LANGUAGE AND-MS-DOS.
   DURATION: 4 MONTHS COMMENCING: 1-09-1993
   (2) WORD PROCESSING AND MS-DOS
   DURATION: 3 MONTHS COMMENCING: 1-09-1993
   - WEEK DAY CLASSES (THEORY AND PRACTICALS)
   
   (3) d BASE III PLUS AND MS-DOS
   DURATION: 4 MONTHS COMMENCING: 1-09-1993
   (4) LOTUS 1-2-3 (SPREAD SHEET ANALYAIS AND MS-DOS
   DURATION: 4 MONTHS COMMENCING: 1-09-1993
   - WEEK END CLASSES THEORY AND PRACTICALS
   - EQUIPMENT USED: LASER XT/2 XT/3, 386 AND BITCOM COMPUTERS IBM COMPATIBLES)
   - QUALIFICATION: G. C. E. (O/L)

   பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் *01-09-1993* (புதன்கிழமை) ஆரம்பமாகும்.


3. **Civil Draughtsmanship and Quantity Surveying Course Covers**
   (i) DRAUGHTSMANSHIP (iv) CIVIL ENGINEERING MATERIALS
   (ii) ENGINEERING DRAWING (v) BUILDING QUANTITY
   (iii) BUILDING CONSTRUCTION (vi) BUILDING MATERIALS
   - QUALIFICATION G. C. E. (O/L) DURATION: 6 MONTHS

4. **City And Guilds Of London Examination Year - 93/94**
   (I) QUANTITY SURVEYING (PART: I & II)
   (II) ELECTRICAL ELECTRONIC ENGINEERING TECHNICIAN

   PART I & II
   
   SUBJECTS: (I) ENGINEERING SCIENCE AND CIRCUITS
   (II) POWER
   (III) ELECTRONIC
   
   QUALIFICATION: G. C. E (O/L)
   
   PART III
   
   SUBJECTS: (I) ADVANCE ELECTRICAL TECHNOLOGY
   (II) GENERATION TRANSMISSION AND DISTRIBUTION OF ELECTRICAL ENERGY.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் டயஸ் / கந்தசாமி

(மயில்வாகனம் தவராஜா)

முன்னை நாள் அரசியல் பொறுப்பாளர்
அம்பாறை, யாழ்.மாவட்டம்

அன்னைமடியில்
14 06-1962

தாயகமண்ணில்
21-08-1989

காலங்கள் ஓடினும்
நீ நடந்த பாதையும்
உந்தன் நினைவுகளும்
நிரந்தரமாய் ........
எம் மனத்தில்.

★

29, றக்காவீதி,
யாழ்ப்பாணம். (5737)

நினைவுகளுடன்
மனைவி, மகன்,
உறவினர், நண்பர்கள்.

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நினைவஞ்சலியும்



தோற்றம்:
12-08-1941

மறைவு:
08-07-1993

### திரு. சிதம்பரி மகேந்திரன்

[முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தர்]

எமது இல்லத்தின் ஒளிவிளக்காக விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

21-08-93 சனிக்கிழமை(இன்று)எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகம்மாள் வீதி,
உடுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

(5736)

---

## நினைவு கூருகின்றோம்... 1993-08-21

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை- அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1989ஆம் ஆண்டு அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நளின்** (பிரதாப்குமார் அஜித்குமார் - தாமரைக்குளம், பொத்துவில் - அம்பாறை)

**அலன்** (சின்னத்தம்பி செல்லத்துரை - நற்பிட்டிமுனை - 07, கல்முனை - அம்பாறை)

பருத்தித்துறை - தம்பசிட்டி, நாவலடிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் டயஸ், கந்தசாமி** (மயில்வாகனம் தவராசா - 66 ஈச்சமோட்டை- யாழ்ப்பாணம்

**லெப். யூசி, சுதா** (இராசதுரை சுதர்சன் - ''சுந்தர நிவாஸ்'' வி.எம் வீதி-பருத்தித்துறை)

வடமராட்சி, திக்கம், அல்வாய் மேற்கு, பூமாஞ்சோலை, வியாபாரிமூலை, நாவலடிச்சந்தி ஆகிய பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இருதயக்கல்லூரி உயர்வகுப்பு மாணவன் உட்பட 11 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட செங்கலடி தளவாய் கொம்மாதுறை, ஆறுமுகத்தான் குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 05 தமிழர்கள்.

யாழ்ப்பாணம், பாஷையூர், வட்டுக்கோட்டை, அச்சுவேலி, புற்றளை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட சிறுவர்கள், பெண்கள் உட்பட 13 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டு - கொக்குவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**சுகந்தன்** (நாகராசா யோகநாதன் - கருவேப்பங்கேணி - மட்டு)

1992ஆம் ஆண்டு மட்டு - களுவாங்கேணிப் பகுதியில் இயக்கவேலை காரணமாகச் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**பாலகுமரன்/உதயன்** (அருளப்பு செல்வராசா- ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஏறாவூர்- மட்டு)

யாழ் - மாதகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ''ஒபபரேசன்'' பூமியதிர்ச்சி நடவடிக்கையில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**காந்தன்** [வைரமுத்து சந்திரமோகன் - 5-ம் குறிச்சி, ஏறாவூர் - மட்டு)

**2 ம் லெப். அண்ணாநம்பி** (அண்ணாலிங்கம் கைலைநாதன்- மாவிட்டபுரம், தெல்லிப்பழை - யாழ்

**நேசன்** (கார்த்திகேசு சிவநாதன் - மாசேரி வடக்கு,வரணி கொடிகாமம் - யாழ்)

**அருள்தாசன்/ஜெனி** (சுதிரமலைநாதன் ரூபநாதன்- சுன்னாகம் வடக்கு - யாழ்)

திருமலை - பொன்னாங்சேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில கொல்லப்பட்ட சேனையூரைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

தாண்டிக்குளம் அகதிமுகாமிலிருந்து வவுனியா நகருக்கு சினிமா பார்க்கச் சென்று காணாமல் போன 05 தமிழர்கள்.

பொன்னாலை - திருவடிநிலை, மாதகல் பகுதிகளில் விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களால் அதிர்ச்சியடைந்து மரணமான விக்ரோறியாக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர்.

வலிகாமம் வடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது ஒரு குழந்தை உட்பட கொலலப்பட்ட 02 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி 7226)

---

Surveying Course Covers

(i) DRAUGHTSMANSHIP (iv) CIVIL ENGINEERING MATERIALS
(ii) ENGINEERING DRAWING (v) BUILDING QUANTITY
(iii) BUILDING CONSTRUCTION (vi) BUILDING MATERIALS

QUALIFICATION G. C. E. (O/L) DURATION: 6 MONTHS

## 4. City And Guilds Of London Examination Year - 93/94

(I) QUANTITY SURVEYING (PART: I & II)
(II) ELECTRICAL ELECTRONIC ENGINEERING TECHNICIAN

PART I & II

SUBJECTS: (I) ENGINEERING SCIENCE AND CIRCUITS
(II) POWER
(III) ELECTRONIC

QUALIFICATION: G. C. E (O/L)

PART III

SUBJECTS: (I) ADVANCE ELECTRICAL TECHNOLOGY
(II) GENERATION TRANSMISSION AND DISTRIBUTION OF ELECTRICAL ENERGY.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

QUALIFICATION: PART II சித்தி எய்தியோர் மட்டும்.

## 5. Special English Classes

இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகியகாலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.

DURATION - 4 MONTHS

## 6. TOEFL (Test of English as a Foreign Language)

DURATION - 4 MONTHS

## 7. Short Hand And Typing (English)

சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

## 8. Motor Mechanism

மோட்டார் வாகனம் திருத்துதல் காலம் - 6 மாதங்கள்
(டீசல், பெற்றோல் இயந்திரங்கள் யாவும்)

## 9. Motor Winding

மோட்டார் வைண்டிங் காலம் - 4 மாதங்கள்

## 10. Electrical Wiring

மின்சார இணைப்பு காலம் - 3 மாதங்கள்

## 11. General Electrician

ஜெனரல் எலக்ரிஷியன் காலம்-4மாதங்கள்

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்கள்

(1) அடிப்படை மின்சாரம் (AC/DC) — BASIC ELECTRICITY
(2) மோட்டார் வைண்டிங் — MOTOR WINDING
(3) ஆமேச்சர் வைண்டிங் — ARMATURE WINDING
(4) ரான்ஸ்போமர் வைண்டிங் — TRANSFORMER WINDING
(5) எல்லாவிதமான மின் உபகரணங்கள் பழுது பார்த்தல் இயக்குதல் — REPAIRING OF ALL TYPE OF ELECTRICAL EQUIPMENTS

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

பதிவாளர்
**பற்றீஷன் இன்ஸ்ரிரியூட்ஸ்**
59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR
**PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,**
**59, St. Patricks Road,**
**Jaffna.**

குறிப்பு:-

- சகல பயிற்சி நெறிகளின் முடிவில் செய்முறை பயிற்சிகளும் வழங்கப்பட்டு, பரீட்சைகளும் நடத்தப்படும். சித்தி அடைபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- MOTOR MECHANISM நெறியில் உள்ளவர்கள் தமது பயிற்சி நெறியை முடித்தபின்பு தகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெற்றுத்தரப்படும்.

சி/7228

## சிந்தனைக்கு

திர்ப்பு சட்டங்களை பின்பற்றியதாக இருக்க வேண்டும் - முன் சான்றுகளைப் பின்பற்றியதாக அல்ல,

-லத்தீன் சட்டக்கூற்று

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

# தமிழீழ நீதித்துறையின் உதயம்

தமிழீழ நீதித்துறையின் கட்டுமானப்பணி படிப்படியாக வளர்ச்சி கண்டுவருகின்றது இதன் இன்றைய நிலை, தமிழீழத்திற்கான நீதியாளர்களையும், சட்டவாளர்களையும் உருவாக்கும் கட்டத்தைத் தாண்டியுள்ளது. நேற்று முன்தினம் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் முன்னிலையில் தமிழீழ நீதியாளர்களும், சட்டவாளர்களும் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்ட வைபவமானது இதனையே காட்டி நிற்கிறது.

தமிழீழ நீதித்துறையின் இவ்வளர்ச்சியானது தனியாக ஒரு நீதிமன்றத்தின் உருவாக்கமோ அன்றி, சச்சரவு தீர்க்கும் ஒரு நிலையத்தின் வளர்ச்சியோ அல்ல. தமிழீழத்தின் கட்டுமானப் பணியின் ஒரு மைல்கல், ஓர் அரசின் உருவாக்கத்திறகுரிய அடிப்படைகளில் ஒன்றாகும். அதே வேளை, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் இழந்த நீதித்துறையின் புதிய உருவாக்கமுமாகும். ஆகையினால், இது குறித்துத் தமிழ் மக்கள் பெருமைப்பட்டுக் கொள்வதற்கும், சிங்களப் பேரினவாதம் ஆத்திரம் கொள்வதற்கும் நிறையவே காரணங்கள் உண்டு.

ஓர் அரசின், அரசாங்கம், நிர்வாகம் என்பனவற்றோடு சமனான முக்கியத்துவம் கொண்டது நீதிததுறையாகும். இது மக்களுக்கிடையிலான சச்சரவுகளை மட்டும் தீர்த்து வைக்கவில்லை. ஓர் அரசின் சீரான ஆட்சிக்கும், வளர்ச்சிக்கும் நீதித்துறையானது பெரும் பங்கு ஆற்றக்கூடியது ஆகும். இதனையே தலைவர் பிரபாகரனும் நீதியாளர்கள், சட்டவாளர்கள் பதவி ஏற்பு வைபவத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

"இன்றைய தினத்தில் தமிழீழ நீதித்துறைக்கு அத்திவாரமிடப்பட்ட ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக இந்தச் சத்தியப் பிரமாண வைபவம் நடைபெறுகின்றது. முன்பு பஞ்சாயத்து முறையில் கிராமிய இணக்க சபைகளை நிறுவி மக்களின் பிணக்குகளைத் தீர்க்க எமது இயக்கம் முயன்றது. இன்று நீதித்துறையில் பயிற்சி பெற்ற போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் உருவாக்கப்பட்டு செம்மையான முறையில் நீதி நிர்வாகத்துறை கட்டிஎழுப்பப்படுகின்றது. ஒரு சுதந்திரம்

## என். சி. ஈ. பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆங்கில தேசிய சான்றிதழ்ப் பரீட்சை (என். சி. ஈ) 1993 எதிர்வரும் 26-ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது இப்பரீட்சைக்கான பரீட்சை நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# படையினர் - ஜே. வி. பியினர் இணைந்த கொள்ளைக்கோஷ்டி!

## சப் இன்ஸ்பெக்டர் தலைமை

(கொழும்பு)

ரிசர்வ் பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்துகொண்டே ஆயுதம் தாங்கிய கொள்ளை கோஷ்டியொன்றை நடத்தி வந்ததாககூறப்படும் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரை பொலிசார் தேடிவருகின்றனர். இராணுவம், கடற்படை, ஆகியவற்றிலிருந்து தப்பியோடி வந்தவர்களையும் ஜே வி பியுடன் தொடர்புடையவர்களையும் ஒன்றிணைத்து கொள்ளைகளில் ஈடுபடுத்திவந்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த கொள்ளைக் கோஷ்டியை சேர்ந்த இராணுவத்திலிருந்து தப்பிவந்த ஒருவர் தற்போது பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இக் கோஷ்டியை சேர்ந்த மற்றுமொருவர் உடவளப்பகுதியில் கொள்ளையடிக்கச்சென்றபோது வீட்டிலுள்ளவர்களாலும் அயலவர்களாலும் அடித்துக் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் ஜே. வி. பி. இயக்கத்தோடு தொடர்புடையவர் என்றும் விஜமுனிகே நந்தபால என்ற பெயருடையவர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

ரிசர்வ் பொலிஸ் சப்- இன்ஸ்பெக்டரின் இந்த கொள்ளைக் கோஷ்டி பாவித்த மூன்று மோட்டார் சைக்கிள்கள், இரு உள்ளூர் துப்பாக்கிகள், இரு கத்திகள், குண்டுகள் என்பவற்றை பொலிசார் மீட்டுள்ளனர்.

## கூட்டமாக கட்சித் தாவல்

தனித்தனி உறுப்பினர்கள் கட்சிமாறுவது இல்லாவிடினும் உறுப்பினர்கள் கூட்டமாகக் கட்சிமாறும் புதிய யோசனை ஒன்றை ஒரு சில வாரங்களினுள் முன் வைக்க அரசு தீர்மானித்திருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

தற்போது சுதந்திரக்கட்சி உறுப்பினர்களிடையேயான பேதம் காரணமாகவே அவர்களைத் தமது கட்சியினுள் சேர்ப்பதற்கு இத்தகைய தீர்மானம் எடுக்கப்படுவதாக நம்பப்படுகின்றது.

# ரயில் பாதை விஸ்தரிப்பு மக்களைவெளியேற உத்தரவு

(கொழும்பு)

மாத்தறை- கதிர்காமம் புகையிரதப் பாதைவிஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து ரயில் பாதைக்கென உத்தேசிக்கப்பட்ட இடங்களில் அமைந்துள்ள வீடுகளில் வசிப்போரை மூன்று மாதத்திற்குள் வெளியேறிவிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வீடுகளை இழப்போருக்கு மாற்றுகாணிகளை வழங்குமுகமாக மாத்தறை பகுதியில் 70 காணித்துண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

# வவுனியாவில் கடவுச்சீட்டு; விண்ணப்பித்து ஏமாற்றம்

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலகம் ஊடாக பாஸ்போட்டிற்கு விண்ணப்பித்த பலருக்கு ஒரு மாதகாலத்திற்கு மேலாகியும் அவை வந்து கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் பாதுகாப்பு நிலைமைகள் உஷாரபடுத்தப்பட்டதையடுத்து அங்கு வெளிநாடு செல்ல பாஸ்போட் பெறுவதற்காக வரும் வடபகுதி மக்களின் தொகையை குறைப்பதற்காக வவுனியாவில் உள்ள மூன்று பிரதேச செயலகங்களிலும் பாஸ்போட் பெற விண்ணப்பிக்கும் விசேட கருமபீடங்கள் ஆரம்பிக்கப்பட்டது நினைவிருக்கலாம் இக்கருமபீடங்களில் விண்ணப்பித்தவர்களுக்கு 10 நாட்களில் கடவுச்சீட்டு வழங்கப்படும் என குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தார்கள். ஆரம்பத்தில் ஒரு சில விண்ணப்பங்களுக்கு இவ்வாறு உடனடியாக கடவுச்சீட்டுகள் கிடைத்தன.

# பஸ் பயணிகள் கொழும்பில் சோதனை

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தற்போது இராணுவத்தினர் பஸ் வண்டிகளையும் மறித்து பயணிகளை சோதனையிடுகின்றனர். அடையாள அட்டைகளும் பரிசீலிக்கப்படுகின்றன.

இதுவரை படையினர் தனியார் வாகனங்களையே வழிமறித்து சோதனையிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# திறமைக்கு உரிய இடம் இல்லாவிடின்கிளர்ச்சிஏற்படும்

— பிரிகேடியர் வீரசேகர

[கொழும்பு]

திறமைசாலிகளுக்கு பொருத்தமான உரியஇடம் வழங்கப்பட வேண்டும் அவ்வாறு வழங்கப்படாது போனால் இளைஞர்கள் மீண்டும் விரக்தியடைந்து துப்பாக்கிகளை ஏந்தும் நிலைக்கு ஆளாகக் கூடும் இதனை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும். என புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர தெரிவித்துள்ளார்.

தென்பகுதியைச் சேர்ந்த இரண்டாயிரம் இளைஞர்கள் புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டதையடுத்து அவர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் தலைமை தாங்கி பிரிகேடியர் வீரசேகர உரையாற்றினார்.

1971இலும் இளைஞர்களின் விரக்தியால் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது. அப்போது பெருந்தொகையானோர் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களை நாம் சீர்திருத்தினோம். ஆனால் அதில் ஏற்பட்ட தவறினாலோ என்னவோ மீண்டும் 1988ஆம் ஆண்டு இளைஞர்கள் துப்பாக்கிகளை ஏந்தவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். புனர்வாழ்வு வழங்கிசீர்பெற்று விடுதலைபெற்ற 10714 பேர்களில் 18 பேர் மீண்டும் குற்றச் செயல்களில் இறங்கி பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் பிரிகேடியர் வீரசேகர மேலும் தெரிவித்தார்.

# கைதிகளின் உறவினர்கள் சுழற்சிமுறை போராட்டம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள 33பேர்க் கைதிகளினதும் உறவினர்கள் கொழும்பில் சுழற்சி முறையில்போராட்டங்களை நடத்தவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் எப்பொழுது எவ்வாறான போராட்டத்தை நடாத்துவர் என்பது குறித்து இது வரை எதுவும் திட்டமிடப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# அரசின் அறிக்கை

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் கொலை பற்றிய விசாரணைகளை நடத்தியஸ்கொட்லன்ட் யாட் இரகசியப் பொலிசாரின் அறிக்கைக்கு ஈடாக இவ்வாரம் அரசினால் அறிக்கையொன்று சமர்பிக்கப்படவுள்ளதாக அத்துலத் முதலியின் வழக்கறிஞர்கள் கூறினர். இதன் பிரதி ஸ்கொட்லன்ட் யாட் பொலிசாரிடமும் அனுப்பப்படவுள்ளது.

# அனுராவின் இடத்திற்கு சந்திரிகா தெரிவாகலாம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உயர் பீடத்தில் சில மாற்றங்கள் விரைவில் நடைபெறவுள்ளதாக கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

குறிப்பாக அனுரா கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால் வெற்றிடமாகியுள்ள தேசிய அமைப்பாளர் பதவிக்கு சந்திரிகாகுமாரரணதுங்கா நியமிக்கப்படலாம் என தெரிவருகிறது.

அடுத்தமாதம் முற்பகுதியில் இத்தெரிவுகள் இடம்பெறலாம் என கட்சிவட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# மத்தியஸ்தர் நியமனம் சிறிலங்கா ஆட்சேபம்

(கொழும்பு)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியுடனான சிறிலங்காவின் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் ஆட்டத் தொடருக்கு மத்தியஸ்தராக முன்னாள் நியூசிலாந்து கப்டன் ஜோன் ரீட் நியமிக்கப்பட்டிருப்பதை சிறிலங்கா ஆட்சேபித்துள்ளது. அவருக்கு தென்னாபிரிக்காவுடன் தொடர்பு இருப்பதே காரணம் என கிரிக்கெட் கட்ப்பாட்டுச்சபை அதிகாரி ஒருமாகவுள்ள தென்னாபிரிக்க- சிறிலங்கா போட்டிக்கு ரீட்டிற்கு பதிலாக வேறு ஒருவரை நியமிக்குமாறு சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்திடம் சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

1965இல் கிரிக்கெட்டிலிருந்து ஒய்வு பெற்ற பின்னர் இவர் தென்னாபிரிக்காவில் குடியேறி அங்கு பயிற்றுன

# கல்வித்திட்டம் தோல்வி

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிக்கும் தற்போதைய தொலைக்கல்வி முறை தோல்வி அடைந்திருப்பதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

க. பொ. த. சாதாரணம்) பரீட்சையில் ஆங்கில மொழிப்

# மட்டு. மீனவர்கள் மீது அதிகாரிகள் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியிலும் கடலிலும் பதிவிலக்கம் இல்லாது காணப்படும் வள்ளங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் உரிமையாளர் மீது வழக்கு தொடரப்படும் என்றும் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரோகான் குணவர்தனா எச்சரித்துள்ளார். மூன்று அங்குல அளவிற்கு இலக்கம்

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன் பிடி கட்டணை செலுத்தாத மீனவரின் வள்ளங்களை பறிமுதல் செய்ய கடற்தொழில் விரிவாக்க அலுவலகமும் இலங்கைவங்கி, மக்கள்வங்கி என்பனவும் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன. மூன்று மாதங்களுக்குமேலாகதவணை கட்டணங்களை செலுத்தாத 50 பேரின் வள்ளங்களை

ஓர் அரசின், அரசாங்கம், நிர்வாகம் என்பனவற்றோடு. சமனான முக்கியத்துவம் கொண்டது நீதித்துறையாகும். இது மக்களுக்கிடையிலான சச்சரவுகளை மட்டும் தீர்த்து வைக்கவில்லை. ஓர் அரசின் சீரான ஆட்சிக்கும், வளர்ச்சிக்கும் நீதித்துறையானது பெரும் பங்கு ஆற்றக்கூடியது ஆகும். இதனையே தலைவர் பிரபாகரனும் நீதியாளர்கள், சட்டவாளர்கள் பதவி ஏற்பு வைபவத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

''இன்றைய தினத்தில் தமிழீழ நீதித்துறைக்கு அத்திவாரமிடப்பட்ட ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக இந்தச் சத்தியப் பிரமாண வைபவம் நடைபெறுகின்றது. முன்பு பஞ்சாயத்து முறையில் கிராமிய இணக்க சபைகளை நிறுவி மக்களின் பிணக்குகளைத் தீர்க்க எமது இயக்கம் முயன்றது. இன்று நீதித்துறையில் பயிற்சி பெற்ற போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் உருவாக்கப்பட்டு செம்மையான முறையில் நீதி நிர்வாகத்துறை கட்டிஎழுப்பப்படுகின்றது. ஒரு சுதந்திரம் பெற்ற இறைமையுடைய நாட்டின் அரச நிர்வாக அலகு போல எமது நீதித்துறை உருவாக்கப்படுகின்றது''.

தலைவர் பிரபாகரனின் இக்கருத்துகள் தமிழீழ நீதித்துறைக்கு கால்கோள் அமைக்கப்பட்டு விட்டது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இதே வேளை நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பயிற்றுவிக்கப்பட்டமையானது உலக நீதித்துறைக்கு ஒரு முன்னுதாரணமும் ஆகும். அதாவது, போராளிகள் நீதியாளர்களாக உருவாக்கம் பெற்றுள்ளமையே அதுவாகும்.

இவ் அமைப்பில், போராளிகள் வாழ்வுஅனுபவம் குறைந்தவர்களாக இருப்பதினால் சிலர் அதனையே சாட்டாக்கி சில விமர்சனங்களை முன்வைக்க முற்படலாம். தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டதுபோல் ''நேர்மையாகவும், உண்மையாகவும் செயற்படுவதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். சில சமயங்களில் விமர்சனங்களுக்கும், சர்ச்சைகளுக்கும் ஆளாக வேண்டியும் ஏற்படலாம்.'' ஆனால், இது உண்மைக்கு எதிரான அதர்மத்தின் குரல்களே என்பதைப் போராளிகளான நீதியாளர்களால் நிரூபிக்க முடியும்.

ஏனெனில், நீதியாளனாக உருவாகியுள்ள போராளிக்கு சட்ட அறிவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் நீண்ட வாழ் அனுபவம் கொண்டவர்களை விட இலட்சியப் பற்றும், மனோதிடமும், தியாக உணர்வும் அவர்களிடம் உண்டு. அதற்கும் மேலாக அபிலாசைகள் அற்ற நிர்மலமான மனம் கொண்டவர்கள் அவர்கள்.

இந்நிலையில். தமிழீழ நீதித்துறை மக்களுக்கு சிறப்பான முறையில் பங்காற்றும் என்பதில் ஐயப்பட ஏதுமில்லை. ஆகையினால், ''தனிப்பட்ட உணர்வுகளுக்கும், பந்தபாசங்களுக்கும் இடமளியாது, நேர்மையுடன் பிரச்சினைகளை அணுகி, சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இலட்சியப் போராளிகளாகிய உங்களிடம் இருந்து தமக்கு நீதியும், நியாயமும் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள், எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் நீங்கள் நேர்மையுடனும், கண்ணியத்துடனும் செயற்பட்டு சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்'' என்ற தலைவர் பிரபாகரனின் விருப்பையே தமிழீழ மக்களும் கொண்டுள்ளனர்.

---

லைப் புலிகளின் யா காப்பில் உள்ள 33போர்க் கைதிகளினதும்உறவினர்கள் கொழும்பில் சுழற்சி முறையில்போராட்டங்களை நடத்தவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரி

...எவ்வாறான போராட்டத்தை நடாத்துவர் என்பது குறித்து இது வரை எதுவும் திட்டமிடப் படவில்லை என தெரிவிக்கப் படுகிறது.

## மத்தியஸ்தர் நியமனம் சிறிலங்கா ஆட்சேபம்

(கொழும்பு)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியுடனான சிறிலங்காவின் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் ஆட்டத் தொடருக்கு மத்தியஸ்தராக முன்னாள் நியூசிலாந்து கப்டன் ஜோன் ரீட் நியமிக்கப்பட்டிருப்பதை சிறிலங்கா ஆட்சேபித்துள்ளது. அவருக்கு தென்னாபிரிக்காவுடன் தொடர்பு இருப்பதே காரணம் என கிரிக்கெட் கட்ப்பாட்டுச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

22 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள தென்னாபிரிக்க-சிறிலங்கா போட்டிக்கு ரீட்டிற்கு பதிலாக வேறு ஒருவரை நியமிக்குமாறுசர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்திடம் சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

1965இல் கிரிக்கெட்டிலிருந்து ஒய்வு பெற்ற பின்னர் இவர் தென்னாபிரிக்காவில் குடியேறி அங்கு பயிற்றுனராகவும் திகழ்கிறார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## புராதன தாரா சிலை திருப்பிப் பெற முயற்சி

[கொழும்பு]

தற்பொழுது பிரிட்டன் நூதனசாலையில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க தாரா சிலையை திருப்பிக் கொடுக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தை சிறிலங்கா அரசு கோரியுள்ளது.

புராதன சிற்பக்கலை வண்ணம் கொண்ட இந்த வெண்கலத்திலான சிலை திருமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இடையில் 1830 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அப்பொழுது இலங்கைகவர்னராக இருந்த சேர். றொபேர்ட் பிறவுணிங் இச்சிலையை பிரிட்டன் நூதனசாலைக்கு அன்பளிப்புச் செய்தார்.

இச்சிலை கி பி 8 - 9ஆம் நூற்றாண்டுக்குரியதாகும்.

## ஆங்கில ஆசிரியர் தரத்தை உயர்த்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஆங்கிலம்கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களின் ஆங்கில மொழித் திறனை அதிகரிக்க நடவடிக்கைஎடுக்குமாறுபுதிய உயர்கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சர் எம். லொக்குபண்டார கல்வி அமைப்பு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழித்திறன் குறைவாக இருப்பதால் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்கள் என்றார் அவர்.

ஆங்கில ஆசிரியர்களுக்கு இப்போது வழங்கப்படும் பத்து மாதப்பயிற்சிபோதாது. ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரண்டு வருடங்கள் தீவிரமான பயிற்சி வழங்கப்பட வேண்டும். ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிரப்புவதற்கு ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்களையும், அரச ஊழியர்களையும் சேவைக்கு அமர்த்துமாறு அமைச்சர் கல்வி அமைச்சு அதிகாரிகளை கேட்டுள்ளார். தற்போது 19,000 ஆங்கில ஆசிரியர்கள் சேவையில் உள்ளார்கள்.

## ஜே. ஆரின் திட்டங்களை டி. பி. நிறைவேற்றுவார்

### ரொனிடிமெல் நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான அரசு ஆரம்பித்த பல அபிவிருத்தி திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் பல வருடங்களாக கைவிடப்பட்டுள்ளன. அந்த திட்டங்களை இன்றைய ஜனாதிபதி செய்து முடிப்பார் எனத் தாம் நம்புவதாக முன்னாள் நிதியமைச்சர் ரொனி டிமெல் தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் விகாரை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்து கொண்டு ரொனிடிமெல் பேசினார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமுல்படுத்திய தாராள பொருளாதாரக் கொள்கையை டி. பி. விஜேதுங்கவும் முழுமையாக அமுல் படுத்துவர் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

யாட் இரகசியப் பொலிசாரின் அறிக்கைக்கு ஈடாக இவ்வாரம் அரசினால் அறிக்கையொன்று சமர்பிக்கப்படவுள்ளதாக அத்துலத் முதலியின் வழக்கறிஞர்கள் கூறினர். இதன் பிரதி ஸ்கொட்லன்ட் யாட் பொலிசாரிடமும் அனுப்பப்படவுள்ளது.

### கல்வித்திட்டம் தோல்வி

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிக்கும் தற்போதைய தொலைக்கல்வி முறை தோல்வி அடைந்திருப்பதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

க. பொ. த. சாதாரணம்) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் 'சி' எடுத்தவர்கள் ஆங்கில பாடம் கற்பிக்க நியமிப்பது மாணவர்களின் ஆங்கில மொழித் தரத்தை உயர்த்த உதவாது என்றார் அவர்.

### ஆண்டுவிழா

மருதனாமடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 54ஆம் ஆண்டு விழா இன்று சனிக்கிழமை இடம் பெறும். ஆராதனைகளும் கூட்டமும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

### ஐ நா கண்டனம்

சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை ஐக்கிய நாடுகள் சபை சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புத் துணைக் குழு கண்டித்துள்ளது.

ஜெனிவா நகரில் தற்போது நடைபெற்று வரும் இக்குழுக் கூட்டத்தில், 27 நாடுகளைச் சேர்ந்த மனிதஉரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர் இந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா பாதுகாப்புப் படைகளின் மனித உரிமைகள் மீறலுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பரீட்சை பின்போடப்பட்டது

வவுனியா விவசாயக்கல்லூரிக்கு 1993 1995ஆம் கல்வி ஆண்டிற்கான டிப்ளோமா கற்கைநெறிக்கு அனுமதிபெறுவதற்கான போட்டிப்பரீட்சை பிற்போடப் பட்டுள்ளதாக யாழ் உதவி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் எதிர்வரும் 28ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த பரீட்சையே இவ்வாறு பின்போடப்பட்டுள்ளது. இதனால் இதுவரை அனுமதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்காதோர் இம் மாதம் 30ஆம் திகதிவரை விண்ணப்பிக்கமுடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

---

றங்கள் விரைவில் நடைபெறவுள்ளதாக கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

குறிப்பாக அனுரா கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்...

...ரணதுங்கா நியமிக்கப்படலாம் என தெரிவருகிறது.

அடுத்தமாதம் முற்பகுதியில் இத்தெரிவுகள் இடம்பெறலாம் என கட்சிவட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## மட்டு. மீனவர்கள் மீது அதிகாரிகள் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியிலும் கடலிலும் பதிவிலக்கம் இல்லாது காணப்படும் வள்ளங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் உரிமையாளர் மீது வழக்கு தொடரப்படும் என்றும் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரோகான் குணவர்தனா எச்சரித்துள்ளார். மூன்று அங்குல அளவிற்கு இலக்கம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன் பிடி கட்டணம் செலுத்தாத மீனவரின் வள்ளங்களை பறிமுதல் செய்ய கடற்தொழில் விரிவாக்க அலுவலகமும் இலங்கைவங்கி, மக்கள்வங்கி என்பனவும் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன. மூன்று மாதங்களுக்குமேலாக தவணை கட்டணங்களை செலுத்தாத 50 பேரின் வள்ளங்களை முதற் கட்டமாக பறிமுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் தோட்ட தொழிலாளர் அதிக நன்மைபெறுகின்றனர்

### பௌத்த பீடாதிபதி தெரிவிப்பு

(கண்டி)

சிங்களத் தோட்டத் தொழிலாளர்களைவிட தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் அதிக நன்மைகளை அனுபவிக்கிறார்கள். இவ்வாறு அஸ்கிரியபீடாதிபதி வண. பலிப்பான சந்திரானந்த மகாநாயக்க தேரோ தெரிவித்தார்.

கோவலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ விஜேரத்ணா பெருந்தோட்ட சேவைகள் செயற்திட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு ஆசி வழங்கிப் பேசும் போது தேரர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிலபுலன்கள், வீடுகள், கால்நடைகள் இன்னும் பல நன்மைகள் வழங்கப்படுகின்றன. சிங்களத்தொழிலாளர்களுக்கு அவர்கள் உரிமைகளில் ஏற்றத்தாழ்வு காட்டப்படுவது குறித்து அமைச்சர் கவனம் எடுக்க வேண்டும் என்றார்.

## மடுமாதா ஆலய திருவிழா பல பக்தர்கள் கூடினர்

மடுமாதா திருநாள் வைபவத்தில் இம்முறை பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டனர். பல பகுதிகளிலிருந்தும் 25க்கும் மேற்பட்ட மத குருக்களும் 15ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களும் மடுமாதா திருநாள் வைபவத்திற்கு வந்திருந்தனர்.

கண்டி மறைமாவட்டபேராயர் அதிவண. வியனி பெர்னான்டோ, யாழ். மறைமாவட்ட பேராயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் மறைமாவட்ட பேராயர் அதிவண ஞானாநந்தன் யோசப் ஆகியோர் கலந்து கொண்டு திருவிழாவை நடத்திவைத்தனர். கண்டி ஆயர் ஆராதனையை தமிழில் நடத்தி வைத்தார்.

### பயிற்சி ஆரம்பம்

வடமராட்சிசுருக்கெழுத்துக் கழகம் தேசிய பயிலுனர் தொழிற்பயிற்சி அதிகார சபையுடன்இணைந்து நடாத்தும்சுருக்கெழுத்தாளர் பயிற்சி ஆரம்ப வைபவமும் சுருக்கெழுத்தாளர் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை 22ஆம் திகதி பிற்பகல் 2 30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## தொடர்பு கொள்ளவும்

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு 1000ற்கு மேற்பட்ட வீடுகளை அமைத்துக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு சுமார் பத்தாயிரம் பனைமரங்கள் வரையில் தேவைப்படுகின்றன.

இத்திட்டத்திற்குத் தேவைப்படும் பனை மரங்களை விற்பனைசெய்ய விரும்புவோர் உடனடியாக உங்கள் பகுதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக வட்டத் தொடர்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 20-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10644

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9707, 26-2505, 40-2782, 26-2299, 27-9946
27-9105, 24-7949, 24-6439, 26-3321, 24-5437
24-8558, 42-8316, 24-4189, 28-3476, 27 2056
26-3628, 22-9193, 26-0535, 28-9622, 28 8444.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

41-9355, 26-4726, 24-4265, 28-1862, 41-1996.

உ

## வை. க. சிவசுந்தரசர்மா
அவர்களின்

## தசாக அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஆடி மாதம் 13. 08. 93 வெள்ளிக்கிழமை காலை உருத்திரபுரத்தில் சிவபதமடைந்த எமது தந்தையார், பிரம்மஸ்ரீ

**வை. க. சிவசுந்தரசர்மா அவர்களின் தசாகக் கிரியை**

22.08.93 ஞாயிற்றுக்கிழமையும், அதைத்தொடர்ந்து ஏனைய கிரியைகள் கீழ்க்கண்டவாறும் நடைபெறும்.

23. 08. 93 திங்கள்: ஏகோதிஷ்டம் மாசிகம்
24. 08. 93 செவ்வாய்: சபிண்டி
25. 08. 93 புதன்: கிருகயக்ஞம்

இத்தினங்களில் தாங்கள் எல்லோரும் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செல்லப்பிள்ளையார் கோவிலடி,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. (5742)

தகவல்:
மக்கள்
சி. சுந்தரதாசகுருக்கள்

## 4ஆம் ஆண்டு
## கண்ணீர்த் துளிகள்

## லெப்டினன்ட் சுதா [ரூசி]
(இராஜதுரை சுதர்சன்)

பிறப்பு: 24-7-1968    வீரச்சாவு: 21-8-1989

ஆண்டுகள் நான்கென்ன நானூறு
சென்றாலும் உனது விதைப்பு
எம் ஈழ மண்ணிலே விருட்சமாக
வடிவெடுக்கும் என்பது உறுதி.

-குடும்பத்தினர்

'சுந்தர நிவாஸ்'
வி. எம். வீதி,
பருத்தித்துறை. (சி/7229)

## 31-ம்நாள் நினைவு அஞ்சலி



## ஆலை உரிமையாளர் சந்திப்பு

வலிகாமம் கோட்டத்திலுள்ள அரிசி மற்றும் அரைவு ஆலை உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலொன்று சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டரில் நாளை ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் வலிகாமம் கோட்டத்து ஆலை உரிமையாளர்கள் ஒன்றிணைந்து நலன் பேணும் சங்கம் உருவாக்குவது குறித்து ஆராயப்படும். இக் கலந்துரையாடலில் அனைத்து ஆலை உரிமையாளர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

## ஆலோசனைக் கூட்டம்

வடமராட்சியில் கரும்புலிகள் ஞாபகார்த்த எழுச்சிக் கிராமம் ஒன்று அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு வடமராட்சிவடக்கு பிரதேச செயலர் பிரிவு சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தவறாது சமூகம் தருமாறு விடுதலைப் புலிகள் அரசியல்துறை வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் அறிவித்துள்ளார். (25)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### யாழ். கிளை நெடுந்தீவுப் பிரிவு

20-8 93 ஆம் திகதி இழுக்கப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டில் பரிசு பெற்ற அதிர்ஷ்ட இலக்கங்கள் பின்வருமாறு:

1-ம் பரிசு இல. 5313    2 ம் பரிசு இல. 6453
3-ம் பரிசு இல. 2110    4-ம் பரிசு இல 5974
5-ம் பரிசு இல. 8429

பரிசுக்குரியவர்கள் தயவுசெய்து தங்கள் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை இல. 73, கண்டி வீதியில் உள்ள யாழ். கிளைத் தலைமையகத்தில் அல்லது இல. 58, மருதடி வீதியிலுள்ள நெடுந்தீவுப் பிரிவு காரியாலயத்தில் தொடர்பு கொண்டு தங்களுக்கான பரிசுப் பொருள்களை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

திரு. நா. கணபதிப்பிள்ளை
தலைவர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ் கிளை.
நெடுந்தீவு பிரிவு (5746)

# VACANCY

The Save the Children Fund (U K) is an International and Non Governmental Organisation Working for the rights and welfare of children irrespective of nationality, race or religion. The following vacancy exists with in the Organisation **RELIEF AND REHABILITATION** programme.

## PROJECT OFFICER - 1

Jaffna District one vacancy.

The post holder will be responsible for the identification, management, implementation and coordination of Relief and Rehabilitation in Jaffna District. She / He works closely with other members of the District team. The successful candidate will have,

1. A minimum of 3 years experience of project management in Relief / Rehabilitation/Development work.
2. Previous experience in working with women group and in Income Generating projects.
3. Fluency in spoken and written Tamil and English
4. Post holder will be required to live in the District.

Applications to be sent **SCF (U K), RAJA VEETHY, THIRUNELVELY EAST, JAFFNA**

**Closing date:** Two weeks from advertisement

## பிரயோக கணித மீள்பரீட்சை நேர அட்டவணை அறிவிப்பு

க. பொ. த. உயர் தரப் பரீட்சையின் ரத்துச்செய்யப்பட்ட பிரயோககணிதம் 1ஆம், 2ஆம் பத்திரம் மீள நடைபெறுவதற்கான நேர அட்டவணை பரீட்சைத் திணைக்களத்தினால் சகல பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய நேர அட்டவணைப்படி இம் மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 8-30 முதல் 11-30 மணிவரை பிரயோக கணிதம் I பரீட்சையும், 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 8-30 முதல் 11-30 மணிவரை பிரயோக கணிதம் II பரீட்சையும் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எழுதுவினைஞர் அதிசிறப்பு பரீட்சை கொழும்பில்

பொது எழுது வினைஞர் சேவையின் அதிசிறப்புத் தரத்திற்கான பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை என்பன கொழும்பில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில்நடைபெறவுள்ளதாக யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் பொது எழுது வினைஞர் சேவையின் அதிசிறப்புத்தரத்திற்கான பரீட்சை எதிர்வரும் 28ஆம்திகதி நடைபெறவுள்ளது. இதற்கான பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அடையாள அட்டையைக் காண்பித்து யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளுமாறும்,

இலங்கை நிர்வாகசேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகள் யாழ். அரச அதிபர் செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் யாழ் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. [பா]

### புலிகள்

என்று கூறலாம். இந்த அளவிற்கு தமது உயிர்களைத் துச்சமாக மதித்துபோராடும் இவர்களைப்போல இந்தநூற்றாண்டில் வேறெந்த அமைப்பும் இல்லை எனவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

### தேர்தல்

என்பது எல்லோருடைய விருப்பமும் எனக் குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார். அரசின் இந்தத் திட்டம் பற்றி கலந்துரையாடுவதற்காக தமிழ் அரசியல் கட்சிகள் நாளை சனிக்கிழமை கூடவுள்ளதாக தெரிகிறது. அந்தக் கூட்டத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஏகமனதான முடிவை எடுக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? என்றகேள்விக்கு குமார் பொன்னம்பலம் பதிலளிக்கையில், இருக்கிறது ஆனாலும் கொஞ்சம் கஷ்டங்களும் ஏற்படலாம். ஏனென்றால் எங்களில் ஒரு சிலர் அரசாங்கத்தைத் தான் வழிபடுவது என்ற நோக்கத்தில் இருக்கிறபடியால் சில நேரம் முட்டுக்கட்டைகள் ஏற்படலாம்.

அரசின் இந்தத் திட்டத்திற்கு எந்தெந்த தமிழ்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன? எனக் கேட்டபோது; குறிப்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ...

### இனப்பிரச்சினையில்

லங்கா அரசினால் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட படுகொலைகள் குறித்து விசாரணை நடத்த முன் வரவேண்டும் என்றும் கோரியுள்ளன.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால்சிறுபான்மை இனமக்களை நடத்தும் முறை குறித்து அனைத்துலக கறுப்புப் பட்டியலில் இலங்கையின் பெயரும் இடம்பெறும்.

ஜெனீவா கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேறுவதைத் தடுக்க சிறிலங்கா அரசு ராஜீக முறையில் பெரும் முயற்சி எடுத்துள்ளது.

### தமிழீழ

முறையில் கிராமிய இணக்க சபைகளை நிறுவி மக்களின் பிணக்குகளை தீர்த்துவைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ நீதித்துறையைக் கட்டியெழுப்பும் முயற்சியின் முதலாவது படிக்கல்லாக இந் நீதிமன்றம் அமைவது குறிப்பிடத்தக்கது.

## வீரவணக்க கூட்டம்

கடற்புலிகளின் வலிகாமம் கோட்டத்தில் ஆடி, ஆவணி மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் இன்று மாலை 7.00 மணிக்கு குருநகர் தொடர்மாடி மைதான முன்றலில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். இதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## கலை நிகழ்ச்சி
(நமது நிருபர்)

தென்மராட்சி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் நடாத்தப்படும் இளையவன் கல்விவளர்ச்சிக்கழக கலை நிகழ்ச்சி இன்று இரவு 7.00 மணிக்கு (நவபுரம்)எருத்திடல் அ. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

## விசேட பொதுக்கூட்டம்
(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தக ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட சகல கடைகளிலும் வேலை செய்யும் ஊழியர்களும் இக் கூட்டத்திற்கு அழைக்கப்படுகின்றனர்.

### பாராளுமன்ற

பிரதிகளும் உறுப்பினர்களின் கவனத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தெரிவுக்குழு கடந்த தடவை கூடியபோது குறித்த அறிக்கை கடிதம் மற்றும் கருத்துக்களை அடுத்த கூட்டத்தில் ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பதவி வெற்றிடங்கள்

### கிளிநொச்சியில் இயங்கிக்கொண்டிருக்கும் அச்சகத்திற்கு

பக்கம் கட்டுநர், அச்சுக்கோப்பாளர்,

(இராஜதுரை சுதர்சன்)

பிறப்பு: 24-7-1968 | வீரச்சாவு: 21-8-1989

ஆண்டுகள் நான்கென்ன நானூறு
சென்றாலும் உனது விதைப்பு
எம் ஈழ மண்ணிலே விருட்சமாக
வடி வெடுக்கும் என்பது உறுதி.

-குடும்பத்தினர்

'சுந்தர நிவாஸ்'
வி. எம். வீதி,
பருத்தித்துறை.

(சி/7229)

## 31-ம்நாள் நினைவு அஞ்சலி



## செல்வி ம. துஸ்யந்தி (பேபி)

தோற்றம் 21-11-1988 | மறைவு 22-07-1993

நம் குலவிளக்கே பேபி நீமறைந்து 31 நாள் ஆனாலும் எம் நெஞ்சங்களில் அணையாது சுடர்விட்டுக்கொண்டே இருக்கின்றாய் அன்பு மகளே! பேபி உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்

பெற்றோர், சகோதரிகள், அம்மம்மா, மாமன்மார், அத்தைமார், அன்ரிமார், மைத்துன மைத்துனிமார், உற்றார், உறவினர்கள்.

தலைமேடை
அல்வாய் மேற்கு, அல்வாய். (5728)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

exists with in the Organisation RELIEF AND REHABILITATION programme.

## PROJECT OFFICER - 1

Jaffna District one vacancy.

The post holder will be responsible for the identification, management, implementation and coordination of Relief and Rehabilitation in Jaffna District. She / He works closely with other members of the District team. The successful candidate will have,

1. A minimum of 3 years experience of project management in Relief / Rehabilitation/Development work.
2. Previous experience in working with women group and in Income Generating projects.
3. Fluency in spoken and written Tamil and English
4. Post holder will be required to live in the District.

Applications to be sent SCF (U K), RAJA VEETHY, THIRUNELVELY EAST, JAFFNA

**Closing date:** Two weeks from advertisement of the post.

[5739]

## மரண அறிவித்தல்



## முருகன் செல்வத்துரை

திரு. முருகன் செல்வத்துரை [முன்னாள் கொழும்பு தொழிற் திணைக்கள எழுதுவினைஞர்] [14 08-1993] கொழும்பில் காலமானார். இவர் ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், அல்வாய்வடக்கைவதிவிடமாகவும்கொண்டவரும், திரு. சி. முருகன், காலஞ்சென்ற சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வரும், திருமதி தருமவதியின் அன்புக் கணவரும், செ. செல்வகுமார் [U K], உமா, பாலகுமார் [யா / சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வி. ஆழ்வார், வள்ளிப்பிள்ளையின் மருமகனும், மு. அற்புதசிங்கம், பரமசிங்காரம், சிவநாதன் [U K], க. இலட்சுமிதேவி ஆகியோரின் அண்ணனும், ஆ. தெய்வநாயகம், சி. பிள்ளையம்மா, காலஞ்சென்ற ஆ. கணேசமூர்த்தி, அ. இராசயோகேஸ்வரி, ப. கமலா, சி. மனோ ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மு. சின்னத்துரையின் சகலனும், உ. பேராயினி, த. மதிவதனி, ப. தயாளன் [U. K], அ. அமுதினி, நந்தினி, சாமினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

''கணேசபதி''
அல்வாய் வடக்கு,
அல்வாய். [5745]

தமிழ் அரசியல் கட்சிகள் நாளை சனிக்கிழமை கூடவுள்ளதாக தெரிகிறது. அந்தக் கூட்டத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஏகமனதான முடிவை எடுக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? என்றகேள்விக்கு குமார் பொன்னம்பலம் பதிலளிக்கையில், இருக்கிறது ஆனாலும் கொஞ்சம் கஷ்டங்களும் ஏற்படலாம். ஏனென்றால் எங்களில் ஒரு சிலர் அரசாங்கத்தைத் தான் வழிபடுவது என்ற நோக்கத்தில் இருக்கிறபடியால் சில நேரம் முட்டுக்கட்டைகள் ஏற்படலாம்.

அரசின் இந்தத் திட்டத்திற்கு எந்தெந்த தமிழ்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன? எனக் கேட்டபோது; குறிப்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த மூன்று கட்சிகளும் திட்டவட்டமாக எதிர்க்கின்றன என்று கூறலாம். ஆனால் நாளைக்கு எங்களுடைய கூட்டம் நடைபெறும் போதுதான் ஏனைய கட்சிகளின் நிலைப்பாட்டை நாம் அறியக்கூடியதாக இருக்கும் என்றார்.

உங்கள் எதிர்ப்பையும் மீறி அரசு இந்த உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தினால் நீங்கள் இந்த தேர்தல்களில் கலந்து கொள்வீர்களா? என்பதற்கு, இல்லை தமிழ் மக்களும்கூட கலந்து கொள்ளக் கூடாது என்பதுதான் எனது தனிப்பட்ட வேண்டுகோள் என்றார்.

சபைகளை நிறுவி மக்களின் பிணக்குகளை தீர்த்துவைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ நீதித்துறையைக் கட்டியெழுப்பும் முயற்சியின் முதலாவது படிக்கல்லாக இந் நீதிமன்றம் அமைவது குறிப்பிடத்தக்கது.

கப்பட்டுள்ளன.

தெரிவுக்குழு கடந்த தடவை கூடியபோது குறித்த அறிக்கை கடிதம் மற்றும் கருத்துக்களை அடுத்த கூட்டத்தில் ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பதவி வெற்றிடங்கள்

## கிளிநொச்சியில் இயங்கிக்கொண்டிருக்கும் அச்சகத்திற்கு

பக்கம் கட்டுநர், அச்சுக்கோப்பாளர், சிலின்டர், பிளேற்றன் இயந்திர இயக்குநர், பைன்டேர்ஸ்

ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

**தங்குமிட வசதியும், சாப்பாடும் ஒழுங்குசெய்து தரப்படும்**

**நேரில் வரவும்**

**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(இ)

உ
ஓம் சக்தி துணை

## ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்

தாவடி வடக்கு, கொக்குவில்.

## அலங்கார உற்சவப் பூர்த்திவிழா

21-08-93 சனிவாரம் - மு.ப 11 00 மணி சங்காபிஷேகம், பகல் 12. 30 மணி மகேஸ்வர பூசை, மாலை 5 00 மணி வசந்தமண்டப பூசை, மாலை 6. 00 மணி திருவூஞ்சல், மாலை 7.00 மணி அம்பாள் வீதிவலம்.

உற்சவ காலத்தில் தினமும் தெய்வீக சொற்பொழிவாற்றிய திரு. ஆறு. திருமுருகன் B. A. அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படும்.

சிறப்புரையும் ஆசி உரையும் அளவையூர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்.

8.15 மணி பாராட்டுவைபவம், 9.00 மணி தொடர்சொற்பொழிவு, 10 00 மணி பட்டிமன்றம்

அமுதசுரபி கலைக்குழுவினர் வழங்கும் பட்டிமன்றம்

## திருமணம்

## இன்பத்தின் மலர்ச்சியா? துன்பத்தின் தொடர்ச்சியா?

| இன்பத்தின் மலர்ச்சி | துன்பத்தின் தொடர்ச்சி |
|---|---|
| திரு. தி. வேல்நம்பி | திரு. ந. விஜயசுந்தரம் |
| திரு. S K. சண்முகலிங்கம் | திரு. இ. நித்தியானந்தன் |
| செல்வன் த. செல்வமனோகரன் | திரு. த. தர்மகுலசிங்கம் |

நடுவர்: திரு. ந. சிவநேசன் [பிரபல சட்டத்தரணி]

[7230] ஆலய பரிபாலன சபை